## மாண்புமிகு **PTR** பழனிவேல் தியாகராஜன் அவர்களுக்கு!

# பிறந்தநாள் வாழ்த்து!

## 07-03-2023





சான்றாய் வாழ்வில் சரித்திரம் படைத்தல்;
தோன்றலின் பெருமை தொகுத்து நிறைக்கும்!
ஆன்ற அறிவில் அணிகலன் பூண்டு,
ஊன்று கோலாய் மக்களின் பணியில்,



தன்னலமின்றிச் செயல்படும் எங்கள் பெருந்தகை,
**பொன்னம்பலத் தியாகராஜரின்** பெயரனுமாகி,
தென்னகம் போற்றும் தெய்வத் தமிழ்மண்,
தன்னிகரில்லா தலைமைச் சென்னையில்,

மன்றம்கூடி மகிழ்வுடன் அழைத்து அமைச்சராக்க,
மன்றில் ஆடும் மாயக்கூத்தனும் மகிழ்வுடன் ஏகி,
தென்றலும் சிலநாள் புயலாய் வெகுண்டெழ,
கன்றலின் சாரென மக்களும் பருகிடச் செய்வார்!



அன்னவர் அறிவும் ஆற்றலின் செறிவும்,
தென்னகமன்றி திறண்ட நாடும் கொண்டிட,
பொன்னிகர் அறிவால் புதுமைச் செய்யும்,
மன்னிய புகழின் நாயகன் தமக்கு,



இன்று இனியதாய் சீர்**பிறந்தநாள்** அன்றோ!
அன்னவர் தமக்கு அன்புடன் இசைந்து,
மன்னிய உறவையும் மகிழ்ந்தே அணைத்து,
தன்னிகரில்லாத் தமிழால் சூடும் **வாழ்த்து** இதுவே!

**அன்புடன் வாழ்த்தும்,**
கவிவளவன் ஆகிய
கு.ப. அசோகன் 07-03-2023